IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

**CC NO. 615/2025**

**Date** : 11.06.2026 **PW 1 (LW10)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விமலா | ஆதார் எண் | |
| கணவர் பெயர் | மகேந்திரன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | சேந்தமங்களம் | வயது | 35 |
| எதிரிகள் 1 முதல் 4 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் சேந்தமங்களம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊர்காரர்கள். கடந்த 15.07.2018 அன்று மாலை 03.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எங்கள் வீட்டிற்கு முன்பு கூட்டமாக சில நபர்கள் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது கூட்டத்தில் இருந்த நபர்கள் யார் என்னையும் எனது கொழுந்தனார் மாயக்கண்ணன், எனது மூத்தார் காளிதாஸ் ஆகியோர்களை அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என என்னால் குறிப்பிட்டு கூற முடியாது. எதிரிகள் அந்த கூட்டத்தில் இருந்தார்களா என எனக்கு தெரியவில்லை. எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்ததால் எதிரிகள் தான் செய்திருப்பார்கள் என சந்தேகத்தின் பேரில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்.** போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றும் அதனால் அவ்வபோது எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன் விரோதம் இருந்தது எனவும் அதை

மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் கடந்த 14.07.2018 அன்று மதியம் 03.30 மணியளவில் நாங்கள் எங்கள் வீட்டில் இருந்தபோது எதிரிகள் எனது வீட்டின் முன்பு வந்து என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும் அப்போது 1-வது எதிரி மகேந்திரன் என்னை இடது பக்க காதில் அடித்தார் என்றும் அப்போது அங்கிருந்த எனது கொழுந்தனார் மாயக்கண்ணன் வந்து தடுத்தபோது எதிரி ராஜிவ்காந்தி தடியால் அவரின் இடது கண் பக்கத்தில் அடித்தார் என்றும் எனது மூத்தார் காளிதாஸை 1 வது எதிரி மகேந்திரன் தடியால் உடலில் அடித்தார் என்றும் அப்போது அங்கிருந்த எதிரிகள் சங்கீதா மற்றும் சுமதி எனது தலைமுடியை பிடித்து கீழே தள்ளி அடித்தார்கள் என்றும் எதிரிகள் ஆயுதங்களை காட்டி எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் புகார் வாக்குமூலத்திலும் போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு எதிரிகளை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதன மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் என் விருப்பத்தின் பேரில் கையொப்பம் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

CC NO. 615/2025

Date : 11.06.2026 PW 2 (LW1)

| பெயர் | மாயக்கண்ணன் | ஆதார் எண் | |
|---|---|---|---|
| தந்தை பெயர் | ஏகாம்பரம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | சேந்தமங்களம் | வயது | 26 |
| எதிரிகள் 1 முதல் 4 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

முதல் விசாரணை

நான் சேந்தமங்களம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 விமலா எனது அண்ணன் மனைவி. எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊர்காரர்கள். கடந்த 15.07.2018 அன்று மாலை 03.30 மணியளவில் நாங்கள் வீட்டில் இருந்தபோது எங்கள் வீட்டிற்கு முன்பு கூட்டமாக சில நபர்கள் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது கூட்டத்தில் இருந்த நபர்கள் யார் என்னையும், அ.சா.1 விமலா, எனது அண்ணன் காளிதாஸ் ஆகியோர்களை அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என என்னால் குறிப்பிட்டு கூற முடியாது. எதிரிகள் அந்த கூட்டத்தில் இருந்தார்களா என எனக்கு தெரியவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றும் அதனால் அவ்வபோது எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன் விரோதம் இருந்தது எனவும் அதை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் கடந்த 14.07.2018 அன்று மதியம் 03.30 மணியளவில் நாங்கள் எங்கள் வீட்டில் இருந்தபோது எதிரிகள் அ.சா.1 விமலா வீட்டின் முன்பு வந்து அவரை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும் அப்போது 1-வது எதிரி மகேந்திரன் அ.சா.1 விமலாவை இடது பக்க காதில் அடித்தார் என்றும் அப்போது அங்கிருந்த நான் வந்து

தடுத்தபோது எதிரி ராஜிவ்காந்தி தடியால் என் இடது கண் பக்கத்தில் அடித்தார் என்றும் எனது அண்ணன் காளிதாஸை 1வது எதிரி மகேந்திரன் தடியால் உடலில் அடித்தார் என்றும் அப்போது அங்கிருந்த எதிரிகள் சங்கீதா மற்றும் சுமதி அ.சா.1 விமலா தலைமுடியை பிடித்து கீழே தள்ளி அடித்தார்கள் என்றும் எதிரிகள் ஆயுதங்களை காட்டி எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகளை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதன மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் என் விருப்பத்தின் பேரில் கையொப்பம் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

CC NO. 615/2025

Date : 11.06.2026 PW 3 (LW2)

| பெயர் | காளிதாஸ் | ஆதார் எண் | |
|---|---|---|---|
| தந்தை பெயர் | ஏகாம்பரம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | சேந்தமங்களம் | வயது | 50 |
| எதிரிகள் 1 முதல் 4 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

முதல் விசாரணை

நான் சேந்தமங்களம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 விமலா எனது தம்பி மனைவி. எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊர்க்காரர்கள். கடந்த 15.07.2018 அன்று மாலை 03.30 மணியளவில் நாங்கள் வீட்டில் இருந்தபோது எங்கள் வீட்டிற்கு முன்பு கூட்டமாக சில நபர்கள் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது கூட்டத்தில் இருந்த நபர்கள் யார் என்னையும், அ.சா.1 விமலா, எனது தம்பி மாயக்கண்ணன் ஆகியோர்களை அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என என்னால் குறிப்பிட்டு கூற முடியாது. எதிரிகள் அந்த கூட்டத்தில் இருந்தார்களா என எனக்கு தெரியவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றும் அதனால் அவ்வபோது எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன் விரோதம் இருந்தது எனவும் அதை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் கடந்த 14.07.2018 அன்று மதியம் 03.30 மணியளவில் நாங்கள் எங்கள் வீட்டில் இருந்தபோது எதிரிகள் அ.சா.1 விமலா வீட்டின் முன்பு வந்து அவரை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும் அப்போது 1-வது எதிரி மகேந்திரன் அ.சா.1 விமலாவை இடது பக்க காதில் அடித்தார் என்றும் அப்போது அங்கிருந்த நான் வந்து

தடுத்தபோது எதிரி ராஜிவ்காந்தி தடியால் எனது தம்பி மாயக்கண்ணனின் இடது கண் பக்கத்தில் அடித்தார் என்றும் என்னை 1வது எதிரி மகேந்திரன் தடியால் உடலில் அடித்தார் என்றும் அப்போது அங்கிருந்த எதிரிகள் சங்கீதா மற்றும் சுமதி அ.சா.1 விமலா தலைமுடியை பிடித்து கீழே தள்ளி அடித்தார்கள் என்றும் எதிரிகள் ஆயுதங்களை காட்டி எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகளை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதன மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் என் விருப்பத்தின் பேரில் கையொப்பம் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Code of Criminal Procedure)
CC No.615/2025

**தேதி. 11.06.2026** **PW4 (LW11)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முஜீபுர் ரஹ்மான் | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | ஆதம் | தொழில் | தலைமை காவலர் |
| கிராமம் | திருநாவலூர் | வயது | 39 |
| எதிரிகள் 1 முதல் 4 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் திருநாவலூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த **உதவி ஆய்வாளர் திரு. நந்தகோபால்** என்பவரை எனக்கு நன்கு தெரியும். அவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 15.07.2018 அன்று காலை 08.00 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.நந்தகோபால் நிலைய பொறுப்பில் இருந்தபோது உளுந்தூர்பேட்டை அரசு மருத்தவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சேந்தமங்களம் கிராமத்தை சேர்ந்த விமலா, க/பெ. மகேந்திரன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று வந்து நிலைய மனு ரசீது எண்.601/2018 ல் பதிவு செய்துள்ளார். பின்னர் 19.07.2018 அன்று மாலை 17.00 மணியளவில் மேற்படி புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து **நிலைய குற்ற எண். 486/2018**-ல் 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக **இதச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)-ன் கீழ்** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அ.சா.1 விமலா கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகும்.** அன்றைய தினமே காலை 09.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரமேஷ், ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான விமலா, மாயக்கண்ணன், காளிதாஸ், மகேந்திரன், பாஸ்கர், சங்கர் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்த சம்பவம் உண்மை என தெரியவந்ததால் அன்றைய தினமே மதியம் 13.30 மணியளவில் சேந்தமங்களம் VAO அலுவலகம் அருகில் நின்றிருந்த இவ்வழக்கின் எதிரி ராஜீவ்காந்தி என்பவரை கைது செய்த நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட **அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ளவர்களுக்கு**

சிகிச்சை அளித்த **மருத்துவர் தமிழ்செல்வியை** விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்றிதழ்கள் பெற்றுள்ளார். **அ.சா.1 விமலாவின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6** ஆகும். **அ.சா.2 மாயக்கண்ணனின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆகும்**. **அ.சா.3 காளிதாஸின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகும்.** இத்துடன் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி-1 க்கு எதிராக **இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)**-ன் கீழும், எதிரி-2 க்கு எதிராக **இதச பிரிவுகள் 324, 506(2)**-ன் கீழும், எதிரி-3, 4 க்கு எதிராக **இதச பிரிவுகள் 323**-ன் கீழும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இல்லை. ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று இவ்வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்திலேயே தயார் செய்து சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் சம்பவ இடம் செல்லாமலும் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது விசாரணை அதிகாரி தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.